**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 175/2019** **தேதி: 05.11.2025**

**வா.சா. 1 – பசுபதி**

**<u>வாதி, பிரதிவாதி தரப்பு சம்மதத்தின் பேரில் வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

4,5,6 வாதிகளுக்கு 2–ம் பிரதிவாதி அனுப்பிய 28.10.2025 தேதியிட்ட கடிதம் மற்றும் அஞ்சல் உறை **வா.சா.ஆ.10**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

வசுவ ரெட்டியார் உடன்பிறந்தவர் நாராயண ரெட்டியார் என்றால் சரிதான். நாராயண ரெட்டியாருக்கு சீத்தம்மாள், மணிமேகலை, புஷ்பம் மற்றும் சின்னக்கம்மாள் என்று நான்கு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். வசுவ ரெட்டியார் மற்றும் நாராயண ரெட்டியார் ஆகியோர்கள் சேர்ந்து பலசரக்கு கடை வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. வசுவ ரெட்டியார் மட்டும்தான் பலசரக்கு கடை வைத்திருந்தார். நாராயண ரெட்டியார் விவசாயம் செய்து வந்தாரா என்றால், நாராயண ரெட்டியாரும், வசுவ ரெட்டியாரும் விவசாயம் பார்த்து வந்தார்கள். தாவா சொத்தில் மாடியுடன் கூடிய வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு யார் கட்டியது என்றால் பிரதிவாதிகள் கட்டியது. அவர்கள் வேண்டுமென்றே கட்டிவிட்டார்கள். வீடு கட்டி முடித்து எத்தனை வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அது எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். வீடு கட்டி முடித்து பால் காய்ச்சிய பின்னார் தான் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் வீடு கட்டும் பொழுதே நாங்கள் ஆட்சேபனை செய்தோம். அப்போது அவர்கள் எங்களை அடித்து விட்டார்கள். வீடு கட்டி பால் காய்ச்சிய பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதை எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். வீடு கட்டும் பொழுதே நாங்கள் ஆட்சேபனை செய்தோம் என்றும்,

அப்போது அவர்கள் எங்களை அடித்து விட்டார்கள் என்ற விவரத்தை எங்களது பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நாராயணன், கிருஷ்ணவேணி ஆகியோர்கள் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் OS.36/2025 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் நாராயணன் என்பவர் எனது பெரியம்மா மகன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் பிராதில் தாவா சொத்து உட்பட அனைத்து சொத்துக்களும் சங்கரலிங்க ரெட்டியாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். OS.36/2025 பிராதில் சங்கரலிங்க ரெட்டியார் இறந்த பின்னர் வசுவ ரெட்டியார் மற்றும் நாராயண ரெட்டியார் பாகம் பிரித்துக் கொண்டார் என்றும், அதில் வசுவ ரெட்டியாருக்கு கிடைத்த பாகத்தில் உள்ள சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வசுவ ரெட்டியாருக்கும், நாராயண ரெட்டியாருக்கும் எந்த வருடம் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் நான் பிறக்கும் முன்பே பாகம் பிரித்துவிட்டதால், எனக்கு தெரியாது. இந்நீதிமன்ற வழக்கின் பிராதில் சங்கரலிங்க ரெட்டியாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அவர் இறந்த பின்பு வசுவ ரெட்டியாரும், நாராயண ரெட்டியாரும் பாகம் பிரித்துக் கொண்டார் என்று சொல்லவில்லை என்று சொன்னால் அதை எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். எனது கணவர் இன்று காட்டு வேலைக்கு சென்றுள்ளார். ஏன் அவரை முதலில் விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. கணவரை சாட்சியாக விசாரிக்கப் போகிறீர்களா என்றால் விசாரிக்கப் போவதில்லை. எனது அண்ணன் நாராயணனை சாட்சியாக விசாரிக்கப் போகிறோம். நாராயணனுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது. நாராயணன் தங்கை கிருஷ்ணவேணிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது. மேற்படி இரு நபர்களையும் ஏன் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம். OS.36/2025 வழக்கில் நான் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1**. மேற்படி

எதிர்வழக்குரைக்கு எந்த வக்கீலிடம் தகவல் சொன்னேன் என்றால் எனது கணவரிடம் கேட்டால் தான் தெரியும். எதிர்வழக்குரை தயார் செய்ய எனது அண்ணன் நாராயணன் தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். இந்நீதிமன்ற வழக்கையும், OS.36/2025 வழக்கையும் எனது அண்ணன் நாராயணன் தான் செலவழித்து நடத்துகிறார் என்றால் எனது அண்ணன் தான் பார்த்து வருகிறார். மேற்படி வழக்குகளை எனது அண்ணன் நாராயணன் நடத்தி வருவதால், அதற்கு பிரதிபலனாக சில சொத்துக்களை கிரையமாக கொடுத்துள்ளோம் என்றால், எங்களுக்கு வாரிசு இல்லாததால், செலவுக்காக கொடுத்துள்ளோம். நான் எனது தாய்மாமனை தான் திருமணம் செய்துள்ளேன். எனது வயது 50. எனது கணவருக்கு வயது 85. தாவா சொத்திற்கு மேற்கே பெருமாள் ரெட்டியார் வீடு உள்ளது என்றால் சரிதான். பெருமாள் ரெட்டியார் வீட்டிற்கு மேற்கே கண்மாய் கரை வரை சிந்தாமணி ரோடு செல்கிறது என்றால் சரிதான். சிந்தாமணி ரோட்டிற்கு மேற்கே எங்களுக்கு 54 சென்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தின் சர்வே எண் 44/9 என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி 54 சென்டில் 27 சென்டை டி.கே.ஆர்.நாராயண ரெட்டியார் கிரையம் பெற்று அது மோசடியானது என்று நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். டி.கே.ஆர்.நாராயண ரெட்டியார் மேற்படி 54 சென்டில் பாதி 27 சென்டை எனது தாத்தா உடன்பிறந்த தம்பி நாராயண ரெட்டியாரின் பெண் மக்கள் சீத்தம்மாள், மணிமேகலை, புஷ்பம் ஆகிய மூன்று பேர் பெயரும் தலா 9 சென்ட் கிரையம் வாங்கியதால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், மேல்முறையீடு சார்பு நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மறுபடியும், அதே சொத்துக்களுக்கு எனது கணவர் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் OS.211/2012 என்ற வழக்கினை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நாராயணன் நீதிமன்றத்திற்கு வரவில்லை. நான் மட்டும் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையான ஆவணம் தான். வா.சா.ஆ.1 ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக அனைத்து சொத்துக்களையும் பாகம் செய்துவிட்டார்களா என்றால் எனது திருமணத்திற்கு முன்பே பாகம் செய்துவிட்டார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் A ஷெடியூலில் 8 வது லக்கமாக 6–ம் பக்கத்தில் தாவா சர்வே எண் உள்ளது என்றால் அதை என் அண்ணனிடம் தான் கேட்க வேண்டும். எனது கணவருக்கு காது கேட்காது. 8 வது லக்கத்தில் சர்வே எண் 46/1–ல் மேல்புறம் பாதி 7 1/2 சென்டை என் பாட்டி சுப்பம்மாளுக்கு கிடைத்திருப்பதாக பத்திரத்தில் உள்ளது என்றால் அதை என் அண்ணனிடம் தான் கேட்க வேண்டும். கீழ்புறம் உள்ள 7 1/2 சென்ட் யாருக்கு கிடைத்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 –ன் படி சொத்துக்களை பிரித்ததாக சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கில் தாவா சொத்துக்களை பிரிக்கவில்லை என்றும், பொதுவில் உள்ளதாக எதன் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் அனைவரும் ஒரு வீட்டுக்காரர்கள் என்ற அடிப்படையில் தாக்கல் செய்தோம். குடும்ப சொத்துக்களை நாராயணன் எங்களிடம் பாகம் கேட்டு, உங்களுக்கு சொத்துக்களில் பாகம் கொடுக்க முடியாது என்று நாங்கள் சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சொல்லவில்லை. நாராயணன் எந்த வக்கீலிடம் சென்றார் என்றால் எனக்கு வழக்கு நடத்தும் வழக்கறிஞரிடம் தான் சென்றுள்ளார். எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நான் எனது வழக்கறிஞரிடம் செல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் தான் வழக்கறிஞரிடம் சென்றார். 54 சென்ட் சம்மபந்தமாக நடந்த வழக்குகளில் எனது கணவர் தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவரின் வாக்குமூலத்தில் நிறைய ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், அதனால் அவரை விசாரித்தால் அது சம்பந்தமாக கேள்விகள் கேட்பார்கள் என்று அவரை சாட்சியாக எங்கள் தரப்பில் விசாரிக்கிவில்லை என்று சொன்னால்

சரியல்ல. பிராதில் தாவா சொத்தை எனது தாத்தா 27.10.1938–ம் தேதி கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளோம். ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அசல் பத்திரம் பிரதிவாதியிடம் உள்ளது. தாவா சொத்தின் பைமாஸ் நம்பர் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டு ரூ.35,00,000/– செலவில் கட்டியுள்ளார்கள் என்றால் இருக்கும். அதை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். வடக்கு மற்றும் தெற்கில் காலியிடம் போட்டு வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். என் பிராதில் சொத்து விவரத்தில் சென்ட்ரிங் வீடு, நிலைக்கதவு, ஜன்னல்கள் உட்பட என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டை கட்டிடத்தோடு ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வீடுகள் உட்பட வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீணப் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றக் கட்டணம் காலியிடத்திற்கு மட்டும் தான் கட்டியுள்ளேன், வீட்டிற்கு கட்டவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடக்கே 7 1/2 சென்ட் இடம் உள்ளது. அந்த சொத்தும் 46/1 சர்வே எண்ணில் தான் உள்ளது என்றும், 46/1A மற்றும் 46/1B என்று பிரிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. தாவா சொத்தின் வடக்கே உள்ள வடக்கு பாதிக்கு எனது பெரிய மாமா ராஜு ரெட்டியார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். ராஜு ரெட்டியார் மனைவி 5–ம் வாதி ராஜம்மாள் என்றால் சரிதான். ராஜு ரெட்டியாரின் மக்கள் 6 முதல் 10 வாதிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக 5 முதல் 10 வரையிலான வாதிகள் வரவில்லை என்று சொன்னால் எனது அண்ணனிடம் தான் கேட்க வேண்டும். நான் பிராதில் கையெழுத்து செய்யும் பொழுது 5 முதல் 10 வாதிகள் என் முன்பாக கையெழுத்து செய்தார்கள். எங்கு வைத்து கையெழுத்து போட்டார்கள் என்றால் வழக்கறிஞர் பெருமாள்சாமி அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டார்கள். பெருமாள்சாமி வக்கீலைத் தவிர வேறு வக்கீலை பார்த்தோமா

என்றால் அதை என் கணவரிடம் தான் கேட்க வேண்டும். என் பெரியமாமனாரின் வாரிசுகளை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்க முடியும். என் பெரியமாமா ராஜு ரெட்டியார் வா.சா.ஆ.1 பாகபத்திரத்தில் அவருக்கு கிடைத்த பாகத்தினை அவருடைய வாரிசுகளுக்கு தானப்பத்திரமாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது மாமாவின் மனைவியிடம் தான் கேட்க வேண்டும். ராஜம்மாள் எனது சித்தி. எனது சித்தி ராஜம்மாளும், இந்நீதிமனறத்தில் OS.16/2001–ல் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்து தனக்கு பாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு என் கணவர் மீதும், எனது பெரியமாமா மற்றும் என் தாயார், எனது பெரியதாயார் அனைவர் மீதும் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் பாகத்திற்கான முதல் நிலை தீர்ப்பாணை கொடுத்தார்கள் என்றால் எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். மேற்படி வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் தாவா சொத்து பிரதிவாதிகள் கைவசம் வந்துவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும், மேற்கே உள்ள சர்வே எண்.44/9–க்கு ஜமீன் காலத்திலேயே என் தாத்தா வசுவ ரெட்டியார் வகையிலும், எனது சிறிய தாத்தா ச.நாராயணன் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் பிறப்பதற்கு முன்பே பாகம் பிரித்துவிட்டார்கள். அந்த பாகத்தில் 44/9–ல் 27 சென்டும், தாவா சர்வே எண்.46/1–ல் தென்புறம் 7 1/2 சென்டும் ச.நாராயணன் பாகத்திற்கு கிடைத்தது என்று சொன்னால் சரியல்ல. ச.நாராயண ரெட்டியாரின் மற்றொரு மகள் சின்னக்கம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ச.நாராயண ரெட்டியாரின் பெண் மக்களில் சீத்தாலட்சுமி மற்றும் புஷ்பம் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை ச.நாராயண ரெட்டியாருக்கு பின்பு அவரது மகள் சின்னக்கம்மாளுக்கு கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னக்கம்மாளுக்கு கிடைத்த பாகத்ததை டி.கே.ஆர்.நாராயண ரெட்டியாருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. எனது கணவருக்குத் தான் தெரியும். டி.கே.ஆர்.நாராயண ரெட்டியார் கிரையம் கொடுப்பதற்கு முன்பே 29.04.1969–ல் தாவா சொத்தை சின்னக்கம்மாள், சேதுராஜ் என்பவருக்கு ஒத்தி வைத்திருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். அந்த ஒத்தியை மீட்டி, டி.கே.ஆர்.நாராயண ரெட்டியார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கே சாயல்குடி ரோடு உள்ளது என்றால் சரிதான். சாயல்குடி ரோட்டிற்கு தெற்கே டி.கே.ஆர்.நாராயணனின் ரைஸ்மில் உள்ளது என்றால் சரிதான். ரைஸ்மில் அருகே ஒரு ஹோட்டல் உள்ளது என்றால் ரைஸ்மில் அருகே ஒரு வீடு உள்ளது. அதன் அருகே ஒரு ஹோட்டல் உள்ளது. அந்த ஹோட்டலில் தான் எனது கணவர் தினமும் டிப்பன் சாப்பிட வருவார் என்றால் சரிதான். அவ்வாறு டிப்பன் சாப்பிட வரும் பொழுது தாவா சொத்தில் 3–ம் பிரதிவாதி வீடு கட்டும் பொழுது எனது கணவர் பார்த்துக் கொண்டே தான் இருந்தார் என்றால் ரோட்டில் யார் போனாலும் பார்க்கலாம். ரோட்டின் மேல் வீடு உள்ளதால் ஊரில் உள்ள அனைவரும் பார்த்தார்கள். ரைஸ்மில்லிற்கு தெற்கே 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான பூர்வீக சொத்து இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான பூர்வீக சொத்தை 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார், டி.கே.ஆர்.நாராயண ரெட்டியாருக்கு பரிவர்த்தனை மூலம் கொடுத்துவிட்டு, தாவா சொத்தினை பரிவர்த்தனையின் மூலம் பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. 1980 க்கு முன்பே மேற்படி பரிவர்த்தனை முடிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த பரிவர்த்தனையின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டு, அதன் பின்பு 1,2 பிரதிவாதிகளுக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான பூர்வீக சொத்தின் சர்வே எண் 44/28 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பரிவர்த்தனை நடந்த அன்றே 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் உடனே சுவாதீனம் பெற்றுக் கொண்டார் என்றும், அதேபோல் 1,2 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்தை டி.கே.ஆர்.நாராயண ரெட்டியார் உடனே சுவாதீனம் பெற்றுக் கொண்டார் என்றும் சொன்னால் பெரியவர்களிடம் தான் கேட்க வேண்டும். தாவா சொத்தின் பைமாஸ் எண்.915 என்று நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5–ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனது அண்ணனிடம் கேட்டால் தான் தெரியும். வா.சா.ஆ.5–ல் ச.வசுவ ரெட்டியார் மற்றும் ச.நாராயண ரெட்டியார் பெயரிலும் கூட்டுப் பட்டாவாக உள்ளது என்றால் பெயர் உள்ளது. எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு 2018 லேயே மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் 1983–லிருந்து இன்று வரை நீதிமன்றத்தில் வழக்கு நடத்துகிறார் என்றால் சரிதான். வீடு கட்டி முடித்து ஒரு வருடம் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அது அறிந்தும் வாழாதிருத்தல் என்ற குற்றத்திற்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு முன்பு 1,2 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு தாவா சொத்தில் குப்பை, படப்பு மற்றும் வண்டி மாடுகள் நிறுத்தி வைத்தல் போன்று பயன்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள 7 1/2 சென்ட் சொத்து 6 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் தான் தாவா சொத்தும் 3–ம் பிரதிவாதி வீடு கட்டும் பொழுது 6 அடி பள்ளத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த பள்ளத்தை 3–ம் பிரதிவாதிதான் மண்ணைப் போட்டு மெத்தினார். அந்த பள்ளத்தை மெத்துவதற்கு 50 லாரி மண் அடித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 1988–ல் திருமணம் நடந்தது. எனது திருமணம் ஆன காலத்திலிருந்து தாவா சொத்திற்கே நான் வந்ததில்லை என்றால் சரிதான். இருக்கிற சொத்தையே எங்களால் பார்க்க முடியவில்லை. நான் குடியிருக்கும்

வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் இடையே சுமார் 500 அடி இருக்குமா என்றால் என் வீட்டிலிருந்து பார்த்தாலே தாவா சொத்து தெரியும். எனது குடும்பத்தில் எனது வயதை விட மூத்த வயதுடைய சித்தி ராஜம்மாள் உள்ளார் என்றால் சரிதான். எனது கணவரும் உள்ளார். எனது மற்றொரு சித்தி சீத்தம்மாள் இறந்துவிட்டார். அவரது கணவர் தேவராஜ் உள்ளார். சீத்தம்மாளுக்கு குழந்தைகள் இல்லை. தாவா சொத்தில் எனக்கே, எனது கணவருக்கோ, எனது குடும்பத்தினர் யாருக்குமே பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. நாராயணனும், நாங்களும் நேசமாக உள்ளோம் என்றால்சரிதான். நாராயணனும், நானும் ஒன்று சேர்ந்து பாகப்பத்திரம் எழுதிக் கொள்ளலாம் என்றால் சரிதான். அப்படியிருக்கும் பொழுது நாராயணன் ஏன் எங்கள் மீது வழக்கு போட்டார் என்றால் எங்கள் சொத்தை அடுத்தவர்கள் எடுத்ததால் வழக்கு போட்டார். நாராயணன் போட்ட வழக்கில் தாவா சொத்தை சேர்த்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதிகளை சேர்க்கவில்லை என்றால் அதை என் அண்ணனிடம் தான் கேட்க வேண்டும். தவறான சட்ட அறிவுரையின் பேரில் கூட்டு சதி செய்து, பிரதிவாதிகளுக்கு தெரியாமால் தீர்ப்பு வாங்குவதற்கு நாராயணனும், நாங்களும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 3–ம் பிரதிவாதி ரேவதி தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்றும் சொன்னால் எனது அண்ணன் நாராயணனை கேட்க வேண்டும். இந்த வழக்கிற்கும், OS.No.36/2025 வழக்கிற்கும் என் வழக்கறிஞருக்கும் செலவுத் தொகை கொடுப்பது எனது அண்ணன் நாராயணன் தான் என்றால் சரிதான். நானும், நாராயணனும், பிரதிவாதிகளுக்கு வீண் தொல்லைகள் கொடுப்பதற்காக கூட்டு சதி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எவருடைய சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், சட்டப்படி

அவருடைய இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

(1 மற்றும் 3–ம் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.